## ஜனவரி – 05 – சனி

### புனித ஜோன் நியூமன்

### “அனைத்துலகோரே! ஆண்டவரை ஆர்ப்பரித்து வாழ்த்துங்கள்! ” – திபா 100 : 1

### முதல் வாசகம் : 1 யோவான் 3 : 11 - 21

அன்புக்குரியவர்களே! நீங்கள் தொடக்கத்திலிருந்து கேட்டறிந்த செய்தி இதுவே: நாம் ஒருவர் மற்றவரிடம் அன்பு செலுத்த வேண்டும். காயினைப்போல் நீங்கள் இராதீர்கள் அவன் தியோனைச் சார்ந்தவன் ஏனெனில் தன் சகோதரரைக் கொலை செய்தான். எதற்காக அவரைக் கொலை செய்தான்? ஏனெனில் அவன் செயல்கள் தீயனவாக இருந்தன. அவன் சகோதருடைய செயல்கள் நேர்மையானவையாக இருந்தன. சகோதர சகோதரிகளே, உலகம் உங்களை வெறுக்கிறதென்றால் நீங்கள் வியப்படைய வேண்டாம். நாம் சகோதர அன்பு கொண்டுள்ளதால், சாவிலிருந்து வாழ்வுக்குக் கடந்து வந்துள்ளோமென அறிந்துள்ளோம் அன்பு கொண்டிராதோர் சாவிலேயே நிலைத்திருக்கின்றனர். தம் சகோதரர் சகோதரிகளை வெறுப்போர் அனைவரும் கொலையாளிகள். எந்தக் கொலையாளிடமும் நிலைவாழ்வு இராது என்பது உங்களுக்குத் தெரியுமே. கிறிஸ்து நமக்காகத் தம் உயிரைக் கொடுத்தார். இதனால் அன்பு இன்னதென்று அறிந்து கொண்டோம். ஆகவே நாமும் நம் சகோதரர் சகோதரிகளுக்காக உயிரைக் கொடுக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். உலகச் செல்வத்தைப் பெற்றிருப்போர் தம் சகோதரர் சகோதரிகள் தேவையில் உழல்வதைக் கண்டும் பரிவு காட்டவில்லையென்றால் அவர்களிடம் கடவுளின் அன்பு எப்படி நிலைத்திருக்கும்? பிள்ளைகளே, நாம் சொல்லிலும் பேச்சிலும் அல்ல, செயலில் உண்மையான அன்பை விளங்கச் செய்வோம். இதனால் நாம் உண்மையைச் சார்ந்தவர்கள் என அறிந்து கொள்வோம் நம் மனச்சான்று நாம் குற்றவாளிகள் எனத் தீர்ப்பளித்தாலும், கடவுள் திருமுன் நம் உள்ளத்தை அமைதிப்படுத்த முடியும். ஏனெனில் கடவுள் நம் மனச்சான்றைவிட மேலானவர் அனைத்தையும் அறிபவர். அன்பார்ந்தவர்களே, நம் மனச்சான்று நாம் குற்றவாளிகள் எனத் தீர்ப்பளிக்காதிருந்தால் நாம் கடவுள் திருமுன் உறுதியான நம்பிக்கை கொண்டிருக்க முடியும்.

**பதில்பாடல் :** அனைத்துலகோரே ஆண்டவரை ஆர்ப்பரித்து வாழ்த்துங்கள்

### நற்செய்தி : யோவான் 1 : 43 – 51

அக்காலத்தில் இயேசு கலிலேயாவுக்குச் செல்ல விரும்பினார். அப்போது அவர் பிலிப்பைக் கண்டு, ”என்னைப் பின்தொடர்ந்து வா” எனக் கூறினார். பிலிப்பு பெத்சாய்தா என்னும் ஊரைச் சேர்ந்தவர். அந்திரேயா, பேதுரு ஆகியோரும் இவ்வூரையே சேர்ந்தவர்கள். பிலிப்பு நத்தனியேலைப் போய்ப் பார்த்து, இறைவாக்கினர்களும் திருச்சட்ட நூலில் மோசேயும் குறிப்பிட்டுள்ளவரை நாங்கள் கண்டுகொண்டோம். நாசரேத்தைச் சேர்ந்த யோசேப்பின் மகன் இயேசுவே அவர்” என்றார். அதற்கு நத்தனியேல், ”நாசரேத்திலிருந்து நல்லது எதுவும் வர முடியுமோ?” என்று கேட்டார். பிலிப்பு அவரிடம், ”வந்து பாரும்” என்று கூறினார். நத்தனியேல் தம்மிடம் வருவதை இயேசு கண்டு, ”இவர் உண்மையான இஸ்ரயேலர், கபடற்றவர்” என்று அவரைக் குறித்துக் கூறினார். நத்தனியேல், ”என்னை உமக்கு எப்படித் தெரியும்?” என்று அவரிடம் கேட்டார். இயேசு, ”பிலிப்பு உம்மைக் கூப்பிடுவதற்கு முன்பு நீர் அத்திமரத்தின்கீழ் இருந்த போதே நான் உம்மைக் கண்டேன்” என்று பதிலளித்தார். நத்தனியேல் அவரைப் பார்த்து, ”ரபி, நீர் இறை மகன் நீரே இஸ்ரயேல் மக்களின் அரசர்” என்றார். அதற்கு இயேசு, ”உம்மை அத்திமரத்தின்கீழ் கண்டேன் என்று உம்மிடம் சொன்னதாலா நம்புகிறீர்? இதைவிடப் பெரியவற்றைக் காண்பீர்” என்றார். மேலும் ”வானம் திறந்திருப்பதையும் கடவுளின் தூதர்கள் மானிடமகன்மீது ஏறுவதையும் இறங்குவதையும் காண்பீர்கள் என மிக உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்” என்று அவரிடம் கூறினார்.

**தியானம்:** செக் குடியரசில் 1811ல் பிறந்து, தனது 25வது வயதில் அமெரிக்காவில் New York மாநகரில் குடியேறிக் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டு தனது 29வது வயதில் Redemptorists சபையில் சேர்ந்து 41வது வயதில் ஆயராகி 1860ல் இறையடி சென்றாலும், அவரது பிரசித்த பெற்ற ஆன்மீகப் பணிகளின் காரணமாக கடந்த 1977ல் புனிதர் நிலைக்கு உயர்த்தப்பட்ட முதலாவது அமெரிக்க ஆயர் என்ற பெருமையை அடைகின்ற புனித ஜோன் நியூமனின் நினைவு நாள் இன்றாகும். இன்றைய நற்செய்தியில் இறை ஆவியின் தூண்டுதால் “நீரே இறைமகன்” என்று இயேசுவின் முன்னிலையில் அறிக்கை செய்கின்ற, யூத மனிதனான நத்தானியேல் என்பவரை சந்திக்கின்றோம். நத்தானியேலிடம் தான் யார் என்பதனை வெளிப்படுத்தியது போன்று இறைமகன் இயேசு எங்களிடமும் இவ்வுலகில் நடக்கும் ஒவ்வொரு காரியங்களின் ஊடாகவும் வெளிப்படுத்தி வருகின்றார். “பிலிப்புவால் கூப்பிடுவதற்கு முன்னரே” நத்தானியேலை அறிந்து வைத்தது போன்று எங்கள் ஒவ்வொருவரையும் “எமது தாயின் வயிற்றில் நாங்கள் கருவாகி உருவாகு முனனே” அறிந்து வைத்திருப்பதோடு, ஒவ்வொருவருக்கும் தனித்தனியாக தமது மீட்பின் திட்டத்தையும் முன்கூட்டியே தயாரித்து வைத்திருக்கின்றார் என்பதனையும் இன்றைய நற்செய்தி எமக்கு வேறுவிதமாகப் படிப்பிக்கின்றது. எனவே, நாமும் முன்மதியோடு செயற்படாது இறைமகன் இயேசுவை ஒதுக்கி வைத்துவிட்டு இவ்வுலக மனிதர்கள் பின்னால் சென்று ஏமாந்திருநதாலும், இறைமகன் இயேசு எங்கள் ஒவ்வொருவரையும் அன்பு செய்வது மட்டுமல்ல, இயேசுவால் நாங்கள் அன்பு செய்யப்படுகின்றோம் என்பதனை மற்றவர்களிடம் நாங்கள் அறிவிக்க வேண்டுமெனவும் எதிர்பார்க்கின்றார். ஆதலால், ஆண்டவர் இயேசுவின் அழைப்பின் குரலுக்கு மாத்திரம் நாம் செவிமடுப்போம். நாங்களும் “ஆம் ஆண்டவரே பேசும், அடியவன் நான் கேட்கின்றேன்” என்று மட்டும் சொல்வோம். இறைமகன் இயேசு தமது அளவிற்கதினமான ஆசீர்வாதங்களால் அனுதினமும் எம்மை நிரப்பி நத்தானியேல் போன்று “பெரிகாரியங்களை” எமது வாழ்வில் காணவைப்பார். ஆண்டவர் இயேசுவின் திருப்பாத நிழலில் நாமும் அமருவதற்கு தயாராகுவோமா?